5. அறிவிப்புகள்.

(அ) அலையோசைப் பத்திரிகையில் வந்த செய்திகள் குறித்து கொண்டு வரப்பட்டுள்ள உரிமைப் பிரச்னை :

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டிசம்பர் 2-ஆம் தேதியன்று சட்டசபையில் நான் உத்திரவிட்டதை மீறி அலைஓசை பத்திரிகையில் வந்த செய்திகளைக் குறித்து திரு. நா. வீராசாமி அவர்களும் மற்ற உறுப்பினர் களும் உரிமைப் பிரச்னை கொண்டுவந்துள்ளார்கள். அந்தப் பிரச்னை பிறகு எடுத்துக் கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

6. அமைச்சர் அறிக்கை.

1972 டிசம்பர் 2-ம் தேதிய பேரவை நடவடிக்கை குறிப்பை மத்திய அரசுக்கு அனுப்புவது குறித்து முதலமைச்சரின் அறிக்கை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு ஒரு அறிவிப்பை இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாடு சட்டப் பேரவை நடவடிக்கைக் குறிப்புகளை மத்திய அரசாங்கத்திடமிருந்து கேட்டு வரவில்லை என்று கூறியிருந்தேன். ஆனால் இப்பொழுது டெல்லியிலுள்ள ஜாயின்ட் செகரட்டரி (ஹோம் அஃபேர்ஸ்) தமிழக அரசு ஹோம் செகரட்டரியோடு தொலைபேசி மூலம் பேசி இரண்டாம் தேதி சட்டப் பேரவை நடவடிக்கைகளை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது முறைப்படி அனுப்பி வைக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

7. அரசினர் சட்டமுன்வடிவு.

1972-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி, மதுரை மாநக ராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.